## பாரதியார் பல்கலைக்கழகத்தில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான
## *‘குறிஞ்சி – கோடைகால முகாம் - 2019’*

பாரதியார் பல்கலைக்கழக வேலை வழிகாட்டித்துறையும், பல்கலைக்கழக மானியக்குழு – மனிதவள மேம்பாட்டு மையமும் இணைந்து பள்ளி மாணவ மாணவியர்களுக்காக ‘குறிஞ்சி’ என்ற தலைப்பிலான கோடைக்கால முகாம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் தேதி முதல் 26ம் தேதி வரையில் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்படவுள்ளது.

கடந்த வருடங்களில் நடத்தப்பட்ட இக் கோடைக்கால முகாமானது கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டுமல்லாது மற்ற பிற மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலும் உள்ள பெற்றோர் மற்றும் மாணவர்களிடையே ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மாணவ/மாணவியர்களுக்குத் தங்குவதற்கு ஏற்ப தனியான தங்கும் விடுதியும் உள்ளது. விருப்பமெனில் பெற்றோர்களும் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

இம்முகாமில் பயிற்சி வகுப்புகளானது சிறப்புரைகள், பயிற்சிப்பட்டறைகள், பரிசோதனைக்கூடங்களைப் பார்வையிடல், போட்டிகள், வினாடி-வினா மற்றும் விளையாட்டுக்கள் போன்றவைகளின் கலவையாக அமையும்.

இம்முகாமில் பல்கலைக்கழகத் துறைப் பேராசிரியர்கள் மற்றும் பிற துறை வல்லுநர்கள் அறிவியல், சமூக அறிவியல், விளையாட்டு அறிவியல், கலைகள், பொது அறிவு, ஆளுமை மற்றும் திறன் மேம்பாடு போன்ற பகுதிகளில் சிறப்புரையாற்றுவார்கள்.

இம்மாதிரியான முகாம்கள், மாணவர்கள் கோடைகால விடுமுறையை முறையாகப் பயன்படுத்தி புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், அதை நடைமுறை வாழ்வில் பயன்படுத்தவும் உதவும். இவையே அவர்களது அணுகுமுறை, கலாச்சாரம் மற்றும் மனத்தினை மேம்படுத்தி அவர்களது நடைமுறை வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவுகிறது.

ஆக, இந்த ஐந்து நாள் கோடைகால பயிற்சி முகாமில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை, நாள்தோறும் 3 முதல் 4 வகுப்புகள் நடத்தப்படும். 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட வகுப்புகளும், தேவைப்படின் வயது மற்றும் மாணாக்கர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து சிறப்பு வகுப்புகளாகப் பிரித்தும் நடத்தப்படும்.

பயிற்சி கட்டணமாக மாணவர் ஒருவருக்கு ரூ.700 (மதிய உணவுடன்) நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. தங்கும் வசதியும் தேவைப்படுகின்றவர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும். (தங்குமிடம் - பல்கலைக்கழக மானியக்குழு – மனிதவள மேம்பாட்டு மையத்தின் விடுதி - நாள் ஒன்றுக்கு - மாணவன்/மாணவி ஒருவருக்கு – ரூ. 50, பெரியவர் – ரூ. 100)

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:


<table>
<tr><td colspan="2" align="center">இயக்குநர் (பொ)<br>பல்கலைக்கழக மானியக்குழு – மனிதவள மேம்பாட்டு மையம்<br>பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 46<br>தொலைபேசி – 0422-2428221</td></tr>
<tr><td>முனைவர் S.R. பிரபாகரன்<br>இணைப் பேராசிரியர்<br>உயிர் தொழில்நுட்பவியல் துறை<br>பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 46<br>அலைபேசி - 9865076485</td><td>முனைவர் C. தயானந்த்<br>உதவிப் பேராசிரியர்<br>விரிவாக்கம், வேலை வழிகாட்டி மற்றும் மாணவர் நலத்துறை<br>பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 46<br>அலைபேசி - 8903416277</td></tr>
</table>

# 'KURINJI - Summer Camp' at Bharathiar University

As a part of Extension activities carried out by the University, Department of Extension and Career Guidance, Bharathiar University and UGC-Human Resource Development Centre are jointly organizing a **Summer Camp** entitled 'Kurinji' aimed at the **school students** for the 4$^{th}$ year in a row. The event is scheduled from 22$^{nd}$ to 26$^{th}$ April 2019 at the University premises.

Over years, the camp had received considerable attention among the public attracting students not only from Coimbatore region, but also from other parts of Tamil Nadu and neighbouring states. The unique hostel facility enables students to undergo camp activities by staying in the University hostels (with parents – optional).

A typical day of the camp comprises of lectures, workshops, lab visits, competitions, quiz, games and trek in campus premises. University Professors and Off-campus Experts will deliver special lectures in respective disciplines covering Science, Social Science, physical education, performing arts, general knowledge, personality and skill development. The organizers opine that the camp would be useful for children to undertake novel initiatives utilizing summer vacation effectively. Besides it also helps students to enlighten their attitude, culture and mindset in day-to-day life.

The five day Summer Camp would be having 3-4 sessions daily from 10AM to 4PM. Children from 1$^{st}$ to 12$^{th}$ standard will be having combined session as well as special sessions based on diverse age groups and number of participants.

A nominal fee of Rs.700/- (including food) have been mooted for the event. Boarding and lodging facility (paid, per day Rs. 50/- for participant and Rs. 100/- for adult) are being arranged for the needy individuals at UGC-HRDC Guest house.

For further details, Contact:

The Director (i/c),
UGC – Human Resource Development Centre,
Bharathiar University,
Coimbatore – 641046
Phone: 0422-2428221 (10am to 5pm)

Dr. S. R. Prabagaran
Associate Professor
Dept. of Biotechnology
Bharathiar University
Coimbatore – 46
Mobile:98650 76485 (after office hours)

Dr. C. Dhayanand
Assistant Professor
Dept. of Extension and Career Guidance
Bharathiar University
Coimbatore – 46
Ph.: 0422-2428239 (office hours)